யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 13 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 07 இல் மாநகரசபை முதல்வருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ் அறிக்கையிலுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மாநகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டுள்ளன.

அ. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 02 | 21,810,183 | 01 | 611,000 | | |
| அதிகரித்துக் கூறல்கள் | 02 | 245,526 | 03 | 93,236,301 | | |
| விடுபாடுகள் | - | | | | 01 | 112,499,034 |

ஆ சபைக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற மூன்று வாகனங்கள் மற்றும் களஞ்சியப் பொருட்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

1.3.2 வங்கிக் கணக்குகள்

--------------------------------

(i) சபையால் பேணப்படுகின்ற வங்கி நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக 2012.12.31 இல் பின்வரும் மீதிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| வங்கியின் பெயர் | நடைமுறைக் கணக்கு இணக்கம் | காசேட்டின்படி வங்கி மீதி (ரூபா) |
|---|---|---|
| இலங்கை வங்கி | 0001093012 | 3,336,281 |
| இலங்கை வங்கி | 0001090685 | 2,248,629 |
| இலங்கை வங்கி | 0071362436 | 21,728,259 |
| இலங்கை வங்கி | 0001093048 | 2,302,830 |
| வர்த்தக வங்கி | 1060012686 | 1,846,590 |
| | | 31,462,589, |

அ) சபையானது வருடாந்த செயற்திட்டம் சரியான முறையில் தயாரித்து நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தாமையால் வங்கி நடைமுறைக் கணக்குகளில் நடைமுறையாண்டு இறுதியில் ரூபா 31,972,098 மீதியாகக் காணப்படுகின்றது.

(ஆ) நகர அபிவிருத்தி நடைமுறைக் கணக்கின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் ரூபா 12,642 பெறுமதியான திரும்பிய காசோலை தொடர்பாக பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 ம் ஆண்டில் 21 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 301,197,196 ஆக இருந்தது.

(ஆ) காலதாமதமாக பதிலளிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்கள்

---

2012ம் ஆண்டு 09 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்திற்குப் பின்னர் காலதாமதமாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது. குறித்த ஐயவினாக்களின் கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 1,965,581 ஆக இருந்தது.

(இ) கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 223இ484இ408 பெறுமதியுடைய 17 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 15இ988இ564 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 39இ061இ204 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---

(அ) பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 23இ186இ183 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 459இ458 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 418,170,181 ஆகக் காணப்படுகின்ற போது ஆளுக்குரிய வேதனாதிகளும் படிகளுக்குமான செலவினம் ரூபா 333இ276இ573 ஆகக் காணப்படுகின்றது. மொத்த மீண்டு வரும் செலவினத்தின் 80மூ ஆளுக்குரிய வரும்படிகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் உள்;ராட்சி ஆணையாளரிடமிருந்து சம்பள மீளளிப்பாக ரூபா 250,801,958 பெறப்பட்டிருந்தும் மீதமான ரூபா 82,474,615 சபைநிதி மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 21,200 | 21,684 | 21,396 |
| குத்தகை வாடகைகள் | 39,420 | 55,352 | 1,577 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 9,731 | 12,302 | 2,851 |
| வேறு வருமானங்கள் | 407,501 | 365,325 | 97,172 |
| | 477,852 | 454,663 | 122,996 |

2.3.2 வருமான அறவீடுகளின் செயற்பாடு

---

(அ) ரூபா 27,958,104 பெறுமதியான அரசிறைக் கடனாளிகள் நிலுவையை அறவிடுவதற்கு சபையினால் எந்தவித ஆக்கபூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு :

| வருமான வகை | நிலுவைத் தொகை (ரூபா) |
| --- | ---: |
| வீத வரிகள் | 21,396,250 |
| கடை வாடகை | 321,734 |
| இறைச்சிக்கடை வாடகை | 26,683 |
| இறைச்சிக்கடை குத்தகை | 108,472 |
| சந்தைக் குத்தகை | 1,120,503 |
| வியாபார உரிமம் | 2,121,327 |
| வியாபார வரி | 2,850,535 |
| உயர்தொழில் மீதான வரி | 12,600 |
| | **27,958,104** |

(ஆ) கழிவகற்றல் சேவைக்கு கட்டணம் உடனடியாகப் பெறப்படாது கடனடிப்படையில் சேவை வழங்கப்பட்டமையால் ரூபா 782,254 பெறுமதியான கழிவகற்றல் கட்டணம் மீளாய்வாண்டில் அறவிடப்படாதுள்ளது.

(இ) மீளாய்வாண்டு இறுதிவரை நீர் விற்பனை கட்டண நிலுவையாக ரூபா 2,102,167 அறவிட வேண்டியுள்ளது. ஆயினும் அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

2.3.3 வருமான பாதிப்பு

---------------------------

(i) இந்திய நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட 05 பஸ் வண்டிகளை சபையில் வருமானம் உழைக்கும் நோக்கத்துடன் நிதியாண்டு காலப்பகுதியில் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தியமையாலும் மற்றும் வாடகைக்கு வழங்கியமையாலும் சபைக்கு ரூபா 522,088 நட்டம் ஏற்பட்டுள்ளது.

(ii) 1999 ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டபோதும் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட மின் விளக்குகள் பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபையின் நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,599,750 பெறுமதியான மீண்டு வரும் செலவினத்திற்கு மின்சார சபையினால் மீளளிப்பு கிடைக்காமையினால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(iii) வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகில் சபைக்குச் சொந்தமான காணியில் வெளிமாவட்ட தனியார் பேரூந்து வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்த போதும் அவற்றுக்குரிய வாகனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) யாழ்ப்பாண நகரப் பகுதியில் அமைக்கப்பட்ட 05 தற்காலிகக் கடைகளில் நாளாந்த வரி அறவீடு செய்யப்படாமையால் சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

2.4 மிகை அறவீடுகள்

--------------------------

(i) சபையில் அமைய அடிப்படையில் கடமையாற்றிய தொழிலாளியின் 8மூ ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை மாதாந்தச் சம்பளத்தில் அறவீடு செய்யப்படாது சபைநிதி மூலம் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 64,914 மற்றும் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை உரிய காலத்தில் செலுத்தப்படாமையால் காலதாமதத்திற்கான தண்டப்பணமாக சபை நிதியிலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 65,996 மிகை அறவீடாகும்.

(ii) சபையினால் வருமானம் உழைக்கும் நோக்கில் நடாத்தப்படும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்ட அலுவலரின் கவலையீனத்தால் தொலைந்த துவிச்சக்கர வண்டியை கொள்வனவு செய்வதற்கு சபைநிதி மூலம் செலுத்தப்பட்ட ரூபா 11,900 மிகை அறவீடாகும்.

(iii) சபையினால் பாவனை செய்யப்பட்ட மின்சாரக் கட்டணம் செலுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டமையால் நடைமுறையாண்டில் விதிக்கப்பட்ட வட்டிக் கட்டணம் ரூபா 72,211 சபை நிதியில் இருந்து செலுத்தப்பட்டிருப்பது மிகை அறவீடாகும்.

(iv) அனுமதிக்கப்படாத சர்வதேச தொலைபேசி அழைப்புக் கட்டணமாகச் சபைநிதி மூலம் செலுத்தப்பட்ட ரூபா 11,894 மிகை அறவீடாகும்.

(v) தாபன விதிக்கோவைக்கு முரணாக வாடகைக்கு வாகனம் பயன்படுத்திய வகையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 611,000 சபைநிதி மூலம் வழங்கப்பட்டிருப்பது மிகை அறவீடாகும்.

2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

-----------------------------------------------

2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீ வளங்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------

அ. நடைமுறையாண்டில் சபையில் 11 உழவு இயந்திரங்கள் ஓடமுடியாத நிலையில் பழுதடைந்து நிலையில் பயன்பாடற்றுக் காணப்படுகின்றன.

ஆ. சபையின் பயன்பாட்டிலுள்ள 02 வாகனங்களுக்கு மானி வாசிப்பு பழுதடைந்து காணப்படுகின்றன.

இ. யூ.என்.எச்.சிஆர் நிறுவனத்தினால் செய்வதற்காக வழங்கப்பட்ட கையிருப்புக்கள் சவர்க்காரங்கள் மற்றும் சலவைப் பவுடர் மற்றும் பற்பசை உட்பட சுகாதார உத்தியோகத்தரால் உரியவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைநிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டதும் நன்கொடையாக பெறப்பட்டதுமான 340 வகையான பொருட்கள் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் காணப்படுகின்றன.

2.5.2 முற்பணக் கணக்குகள்

-----------------------------------

(i) குறித்த நிதி வருடத்தில் வழங்கப்பட்ட முற்பணங்கள் அவ்வருடத்திலேயே தீர்வு செய்யப்பட வேண்டுமெனக் கூறப்பட்டபோதும் நடைமுறையாண்டு இறுதிவரை ரூபா 9,122,352 பெறுமதியான நிதிப்பிரமாணம் 371ற்கு இணங்க முற்பணம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட தீர்வு செய்யப்படாத முற்பணமாக ரூபா.5,438,085 காணப்பட்டபோதும், 1995 ம் ஆண்டிற்கு முற்பட்ட முற்பணங்கள் ரூபா 2,271,448 ற்கு பதிவழிப்பு செய்வதற்கான அங்கீகாரத்திற்காக ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும்,

ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 3,166,637 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நவீன சந்தை மலசலகூட வடிகால் துப்பரவு செய்வதற்காக முடநநறெநட ளஎவ. டுவன. நிறுவனத்திற்கு மாதாந்த கொடுப்பனவிற்கான ஒப்பந்தத்தின் பிரகாரம் 75 மூ கட்டணத்தை நவீன சந்தை மற்றும் பெரியகடை சந்தைக் குத்தகையாளரிடமிருந்து அறவீடு செய்து செலுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டபோதும், குத்தகை யாளரிடமிருந்து அறவீடு செய்யப்படாத காரணத்தினால் 2010 ம் ஆண்டில் ரூபா 1,125,000 சபைநிதி மூலம் குறித்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முற்பணம் அறிக்கையிடும் திகதி வரை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மறுக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூபா 122,680 இற்கு ஐந்து வருடத்திற்கு மேலாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொடர்ந்தும் முற்பணக் கணக்கு மீதியாக இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

2.5.3 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

---

ரூபா 648,086 பெறுமதியான அறவிடப்படாத பதவியினர் கடன் நிலுவைகள் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் பணிக்கொடையில் இருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் ஐந்து வருடங்களுக்கு மேலாக மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1987 ம் ஆண்டு மாநகர சபைக் கட்டளைச் சட்டம் | |
| (i) அத்தியாயம் 252 பிரிவு 42 (1) | சபைக்குச் சொந்தமான 17 தற்காலிகக் கடைகள் நிரந்தரக் கடைகளாக அமைக்கப்படும் போது அங்கீகாரமற்ற கட்டிடங்கள் தொடர்பாக சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் 252 பிரிவு 188 (1) | சபையின் நோக்கத்திற்கு முரணாக 04 விடயங்களுக்கு சபை நிதி மூலம் ரூபா 227,404 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை | |
| அத்தியாயம் ஓஜஏ பிரிவு 10(4) | வாடகை மோட்டார் வண்டி பயன்படுத்தப்படும் போது மைல்கூலி வழங்கப்படாது நாட்கூலி அடிப்படையில் ரூபா 611,000 வாடகைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் | |
| (i) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 234 | 06 மாதங்களுக்கு மேல் வசூலிக்கப்படாமல் உள்ள ரூபா 108,608 பெறுமதியான 18 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (ii) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 2இ829இ698 பெறுமதியான நானாவித வைப்புக்களை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 849(2) | சர்வதேச தொலைபேசி அழைப்புக் கட்டணமாக சபைநிதி மூலம் ரூபா 11,894 செலுத்தப்பட்டுள்ளது. |

(ஈ) <u>வடமாகாண சபை நிதி ஒழுங்கு விதி</u>

| | |
|---|---|
| நிதி ஒழுங்கு விதி 101 மற்றும் 102 | உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2006 ம் ஆண்டின் 10 ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2011இல் அறவிடப்பட்ட ரூபா 11,960 பெறுமதியான நிறுத்தி வைக்கப்பட்ட வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2002 ம் ஆண்டின் 14 ம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் | நடைமுறையாண்டில் அறவிடப்பட்ட ரூபா 12,077 பெறுமதியான பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (எ) 2009 ம் ஆண்டின் 09 ம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்பும் வரிச்சட்டம் | நடைமுறையாண்டில் அறவிடப்பட்ட ரூபா 2,013 பெறுமதியான நாட்டைக் கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) 2012 ஜனவரி 20 ம் திகதிய 12.̈.2000(ளை) ம் | தொழில்நுட்பக் கல்லூரி பயிலுநர்களுக்கு நடைமுறையாண்டில் ரூபா 163,450 பயிலுநர் படிக் |

| | |
|---|---|
| இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | கொடுப்பனவு குறைத்து வழங்கப்பட்டுள்ளது. |
| (ஐ) 2007.08.08ம் திகதிய பொதுநிர்வாக சுற்றறிக்கை இல. 22∴999 (ஓ) பிரிவு | மாநகர ஆணையாளருக்கு மட்டுமே போக்குவரத்து வசதி வழங்கப்பட வேண்டுமென குறிப்பிட்டபோதும் சபையில் செயலாளர் வதிவிடத்திற்கு சென்று வருவதற்கு 59-7103ம் இலக்க பிக்கப் வாகனத்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. |

2.7. சிக்கனமற்ற கொடுப்பனவுகள்

(i) தாபன விதிக் கோவையின் அத்தியாயம் ஓஐஏ பிரிவு 3 இன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் கடமையின் பொருட்டு உள்நாட்டில் பிரயாணம் மேற்கொள்ளும்போது அரசாங்கத்திற்கு குறைந்த செலவு ஏற்படக்கூடியவாறு சிக்கனமான செலவில் பிரயாணம் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் மாநகர முதல்வர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்று வருவதற்கு விமானக் கட்டணமாக ரூபா 14,900 செலுத்தப்பட்டுள்ளது.

(ii) மாநகர முதல்வரின் பயன்பாட்டுக்கென கொள்வனவு செய்யப்பட்ட ளுயஅளரபெ புயடயஒல ளுஐஐ கையடக்கத் தொலைபேசிக்கான ரூபா 99,000 கொடுப்பனவும், ஆணையாளர் பகுதியின் பாவனைக்கென கொள்வனவு செய்யப்பட்ட 03 எண்ணிக்கையான ழேமயை கையடக்கத் தொலைபேசிகளுக்காக ரூபா 10,050 சபைநிதி மூலம் செலுத்தப்பட்டிருப்பது சிக்கனமற்ற கொடுப்பனவுகளாகும்.

(iii) தாபன விதிக்கோவை அத்தியாயம் ஓஐஏ பிரிவு 10(அ) முரணாக வாடகை மோட்டார் வண்டி 188 நாட்களுக்கு நாளொன்றிற்கு ரூபா 3,250 என்னும் அடிப்படையில் வாடகைக்கு வாகனம் பயன்படுத்திய கொடுப்பனவாக ரூபா 611,000 சபையால் வழங்கப்பட்டுள்ளது.

2.8 தவறான கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

(அ) முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள தற்காலிகக் கடைகளுக்கு நிலம் மட்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அந்நிலத்தில் அமைக்கப்பெற்ற கடைகளுக்கு மாநகர சபை ஆணையாளரின் பெயரில் மின்னிணைப்பு பெறுவதற்காக ரூபா 16,750 மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் அங்கத்தவர்களுக்கும், ஊழியர்களுக்கும் மொபிட்டல் தொலைபேசி இணைப்பு பெறுவதற்காக சபை நிதியில் இருந்து ரூபா 200,000 முற்பணமும் மாதாந்த தொலைபேசிப்பட்டியல் கொடுப்பனவாக நடைமுறையாண்டில் ரூபா 154,202 கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளது.

(இ) உள்;ராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் மாநகர முதல்வரின் அலுவலகத் தொலைபேசி, வதிவிடத் தொலைபேசி மற்றும் கைத்தொலைபேசி பாவனைக் கட்டணமாக 2012 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் ரூபா 197,481 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

2.9 ஒப்பந்த நிர்வாகம்

2.9.1 சபைநிதி மூலமான மூலதன வேலைகள்

வருடாந்த பாதீட்டின் பிரகாரம் வீதி வேலைகள், வடிகால் வேலைகள் மற்றும் கட்டிட வேலைகளுக்காக ரூபா 19,700,000 ஒதுக்கப்பட்டபோதும் நடைமுறையாண்டு வேலைத் திட்டங்களின் பிரகாரம் ரூபா 26,744,000 செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளமையால் ரூபா 7,044,000 பாதீட்டுத் தொகைக்கு மேலதிகமாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு :

| வேலைத்திட்டம் | பாதீட்டின் படி ஒதுக்கிய தொகை | வேலைத் திட்டங்களுக்காக ஒதுக்கிய தொகை | மேலதிகமான தொகை |
|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| வீதி வேலைகள் | 11,000,000 | 13,063,000 | 2,063,000 |
| வடிகால் வேலைகள் | 5,700,000 | 9,118,000 | 3,418,000 |
| கட்டிட வேலைகள் | 3,000,000 | 4,563,000 | 1,563,000 |
| | 19,700,000 | 26,744,000 | 7,044,000 |

2.9.2 செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

(அ) வருடாந்த செயற்திட்டம் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு செயற்திட்டங்களைச் செயற்படுத்தாமையால் நடைமுறையாண்டில் ரூபா 2,107,000 பெறுமதியான 05 சபைநிதி மூலமான செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம் காணப்பட்டது.

விபரம் வருமாறு :

| செயற்திட்டத்தின் பெயர் | ஒதுக்கிய தொகை (ரூபா) |
|---|---|
| யாழ் பஸ் நிலைய 10ஏ கடை கட்டிட நிர்மானம் | 131,000 |
| ஆரியகுளம் வாய்க்கால் சுவர் வேலை | 659,000 |
| சங்கிலியன் வீதி வாய்க்கால் வேலை | 1,000,000 |
| 1ம் குறுக்குதெரு வீதி பின்பக்க வடிகால் திருத்தம் | 200,000 |

| | |
|---|---|
| சிவலிங்கப்புளியடி 2வது ஒழுங்கை வீதி வேலை | 117,000 |
| | 2,107,000 |

(M) கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 7,001,915 பெறுமதியான 05 வேலைத்திட்டங்களும் 2010 இல் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 568,544 பெறுமதியான 05 வேலைத்திட்டங்களும் 2011 இல் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,434,908 பெறுமதியான 02 வேலைத்திட்டங்களும் நடைமுறையாண்டு இறுதிவரை நடைமுறைப்படுத்தப்படாது புதிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

விபரம் வருமாறு :

| வேலைத்திட்டம் | தொகை (ரூபா) |
|---|---|
| 2010ம் ஆண்டு வேலைத்திட்டம் | |
| யாழ் மாநகர சபை வாகன தரிப்பிட கொட்டகை விஸ்தரிப்பு | 114,093 |
| செங்குந்தா கடைத்தொகுதி கட்டிடம் ஐஐ புனரமைப்பு வேலை | 4,679,177 |
| பக்க வடிகால் புனரமைப்பு | 800,000 |
| இரத்தினம் அவனியூ திருத்தம் | 470,000 |
| பண்டாரவளவு உபகளஞ்சியம் அமைப்பு | 938,645 |
| | 7,001,915 |
| 2011ம் ஆண்டு வேலைத்திட்டங்கள் | |
| குருநகர் தாங்கி சுற்றுமதில் அமைத்தல் | 146,901 |
| பண்ணை கொல்கள நில வேலை | 75,147 |
| கடற்கரை ஓர வாய்க்கால் கல்வெட்டு வேலை | 159,012 |
| பாசையூர் மரக்கறி சந்தை மேம்படுத்தல் வேலை | 80,000 |
| யாழ் மின்சார வீதியில் நடமாடும் மலசலகூடம் அமைத்தல் | 107,484 |
| | 568,544 |

<u>2012ம் ஆண்டு வேலைத்திட்டங்கள்</u>

| | |
|---|---|
| அந்தோனியார் வீதி கடற்கரை வீதி வரையிலான வடிகால் திருத்தம் | 995,000 |
| தேவாலயத்திற்கு அருகிலுள்ள வடிகால் புனரமைப்பு | 439,908 |
| | **1,434,908** |

2.9.3 பொருத்தமற்ற வீதிவேலை மதிப்பீடுகள்

---

அ. செட்டித்தெரு 2 ம் குறுக்குவீதி வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 480,000 ஆகவும் வேலை நிறைவேற்று அறிக்கைப் பெறுமதி ரூபா 266,566 ஆகவும் காணப்படுவதுடன் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட பொருட்கள் வீதி வேலையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஆ. செட்டித்தெரு 2 ம் குறுக்கு வீதி வேலைக்கான தொழிலாளர் மதிப்பீட்டில் 120 வேலை நாட்கள் குறிப்பிடப்பட்டிருந்தும் வேலை நிறைவேற்று அறிக்கையின் பிரகாரம் 08 நாட்களில் வேலை முடிவடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2.9.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

மீளாய்வாண்டில் இந்துக் கல்லூரி வீதி சபை நிதி ஒதுக்கீட்டில் ரூபா 110,807 செலவில் 2012.01.20 ம் திகதி புனரமைக்கப்பட்டது. ஆயினும் குறித்த நிதியாண்டின் இறுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை மீளவும் அதே வீதியை புனரமைத்துள்ளமையால் ரூபா 110,807 சம்பந்தமாக கணக்காய்வுக்கு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

2.10 செயற்பாடுகளின் செயற்திறனின்மை

---

அ. சபையின் மூலதன வேலைகளுக்காக வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 3,147,424 குறித்த வேலைகள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலும் நிறைவேற்றப்படாத நிலையிலும் நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருப்பது சபைப் பரப்பிலுள்ள மக்களுக்கு கிடைக்க

வேண்டிய நலன்புரி நன்மைகளை பெறமுடியாதுள்ளமையைக் காட்டுகின்றது.

விபரம் வருமாறு :

| ஆண்டு | நன்கொடை வழங்கியோர் | நன்கொடை வழங்கிய நோக்கம் | வைப்பிலுள்ள தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 2006 | யூ.என்.ஏச்.சி.ஆர் | வீதி அமைத்தல் | 212,000 |
| 2012 | அபிவிருத்தி அதிஸ்டலாப சீட்டு இழுப்புசபை | சீமெந்து இருக்கை வேலை | 19,930 |
| 2012 | சீனத்தூதுவர் | பொதுசன நூலக உசாத்துணை பகுதி வர்ணம் பூசுதல் | 1,000,000 |
| 2012 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | கால்வாய் அமைத்தல் | 1,826,321 |
| 2012 | சின்னத்துரை பொது நூலகம் | பொதுசன நூலக உசாத்துணை பகுதி வர்ணம் பூசுதல் | 60,000 |
| 2012 | சீனத்தூதுவர் | பொதுசன நூலக உசாத்துணை பகுதி வர்ணம் பூசுதல் | 29,173 |
| | | | 3,147,424 |

ஆ. சபையினால் செலுத்தப்பட வேண்டுமென சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 54,334,876 ஒதுக்கம் கடந்த ஐந்து வருடத்திற்கு மேலாக செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இ. சபையினால் செலுத்தப்பட வேண்டுமென சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,944,190 பெறுமதியான மூலதன வேலைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

ஈ. ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டு நானாவித வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,297,857 பெறுமதியான ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை, ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புத் தொகை மற்றும் அக்ரஹாரா காப்புறுதித் தொகை அறிக்கையிடும் திகதி வரை குறித்த நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.11 உள்ளகக் கணக்காய்வு

---

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

முறைமைகளும் கட்டுப்பாடுகளும் சம்பந்தமான பின்வரும் விடயங்களில் விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. கணக்கீடு
iv. மனிதவள முகாமைத்துவம்
v. நன்கொடையும், மானியங்களும்
vi. வாகனங்களின் பயன்பாடு
vii. பெறுகை நடைமுறை
viii. நானாவித வைப்புக்கள்
ix. வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு.